## தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு! (30.7.2025)

### ரயில்வேயில் லோகோ பைலட்டுகளுக்கு

## உரிய ஓய்வு அளிக்கப்படுகிறதா? காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறதா?

### மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்விக்கு – ரயில்வே அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 2-

**இந்திய ரயில்வேயில் லோகோ பைலட்டுகள் எனப்படும் இன்ஜின் ஓட்டுனர்களுக்கான ஓய்வு, ரயில்வேயில் காலி பணியிடங்களை நிரப்பும் முறை குறித்து மக்களவையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மற்றும் சயானி கோஷ் ஆகியோர் ஜூலை 30 ஆம் தேதி கேள்விகளை எழுப்பியிருந்தார்கள்.**



**அக்கேள்விகள் வருமாறு:**

“இந்திய ரயில்வேயில், ரயில் இன்ஜின்களை இயக்கும் லோகோ பைலட்டுகளுக்கு வேலை நேரம் மற்றும் விடுப்புக் கொள்கை உள்ளதா?

அப்படியானால் ஒரு வேலை நாளில் ஒரு லோகோ பைலட்டின் மொத்த வேலை நேரம் எவ்வளவு? அதில் இடைவேளை மற்றும் இயற்கை உபாதைக்கான நேரம் உள்ளிட்ட விவரங்கள் என்ன?

பணியில் இருக்கும் லோகோ பைலட்டுகளுக்கு உணவு உட்கொள்வதற்கும் இயற்கை உபாதைகளுக்கு சென்று வரவும் இடைவேளை வழங்க வேண்டும் என்ற அவர்களின் நீண்ட கால கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்தது என்பது உண்மையா? இதனால்தான் பெரிய ரயில் விபத்துகளில் மனித தவறுகள் காரணமாகக் கூறப்படுகின்றன என்பது உண்மையா?

லோகோ பைலட்டுகளின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நீண்ட தூர அல்லது அதிவேக ரயில்களில் இரண்டு லோகோ பைலட்டுகள் அல்லது உதவி பைலட்டுகளை நியமிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

லோகோ பைலட்டுகளுக்கு வெளியூர் பயணத்தில் இருந்து திரும்பிய பின் கட்டாயமாக 16 மணிநேர ஓய்வும், வாராந்திர 30 மணிநேர ஓய்வும் முறையாக வழங்கப்படவில்லை என்ற குறைகளை அரசாங்கம் அறிந்திருக்கிறதா?

லோகோ பைலட்டுகள் மற்றும் உதவி லோகோ பைலட்டுகளுக்கு போதுமான ஓய்வு வழங்கப்படுவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ரயில்வேயில் தற்போது உள்ள லோகோ பைலட்டுகள் மற்றும் உதவி லோகோ பைலட்டுகளுக்கான காலியிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவற்றை நிரப்பாததற்கான காரணங்கள் என்ன?”

இவ்வாறு அவர்கள் கேள்விகளை எழுப்பியிருந்தார்கள்.

**ஒன்றிய அமைச்சர் பதில்:**

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில் வருமாறு:

“இந்திய ரயில்வே குடும்பத்தில் லோகோ பைலட்டுகள் முக்கியமான உறுப்பினர்கள். அவர்கள்தான் பயணிகள் மற்றும் சரக்கு ரயில்களின் போக்குவரத்தை பாதுகாப்பான மற்றும் திறமையான முறையில் இயக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

லோகோ பைலட்டுகளுக்கு சரியான பணி சூழல்களை உறுதி செய்வதில் இந்திய ரயில்வே உறுதிபூண்டுள்ளது. லோகோ பைலட்டுகள் CONTINUOUS CATEGORY எனப்படும் தொடர்ச்சியான பணிப் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ரயில்வே சட்டம், 1989 பிரிவு 132 (2) இன் படி தொடர்ச்சியான பணிப் பிரிவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாரத்துக்கு 54 மணி நேர வேலை நேரங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இவர்கள் தொடர்ச்சியான பிரிவின் கீழ் பணியாற்றுவதால் இரு வார கால பணி மேற்கொள்கிறார்கள்.

“வேலை நேரம் மற்றும் ஓய்வு காலம்” விதி 8 ஆனது, லோகோ பைலட்டுகளுக்கு பதினான்கு நாட்களில் சராசரியாக வாரத்திற்கு 52 மணி நேரம் பணி என்ற வழிகாட்டுதல்களை வகுக்கிறது.

அதாவது, ரயில்வேயில் உள்ள மற்ற ‘தொடர்ச்சியான பணிப் பிரிவு’ ஊழியர்களுக்கு 54 மணிநேரம் அதிகபட்சமாக இருக்க வேண்டும்.

ரயில்வே ஊழியர்களின் விடுப்பு தொடர்பான விதிகளை நிர்வகிக்கும் ரயில்வே சேவைகள் (தாராளமயமாக்கப்பட்ட விடுப்பு) விதிகள், 1949, சராசரி ஊதிய விடுப்பு (LAP), அரை சராசரி ஊதிய விடுப்பு (LHAP), மாற்றியமைத்துக் கொள்ளும் விடுப்பு, அசாதாரண விடுப்பு (EOL) போன்ற விடுப்பு வகைகளை வகுத்து வைத்துள்ளன.

இவ்விதிகள் லோகோ பைலட்டுகள் உட்பட அனைத்து ரயில்வே ஊழியர்களுக்கும் பொருந்தும்.

லோகோ பைலட்டுகளுக்கு வெளியூர் பயணம் முடிந்த பின் வழங்கப்படும் தலைமையக ஓய்வு அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது.

அதாவது ஒரு இயங்கும் லோகோ பைலட், தான் சென்று சேர வேண்டிய இடத்தை அடைந்த பிறகு அவருக்கு 16 மணிநேர ஓய்வு வழங்கப்படுகிறது,

மேலும் ரயில்வே சட்டம், 1989 இன் பிரிவு 133 இன் படி 30 மணிநேரம் அல்லது 22 மணி நேர ஓய்வு வேலை நேரத்தைப் பொறுத்து அவ்வப்போது வழங்கப்படுகிறது.

வெளியிட ஓய்வு என்பது பணி நேரத்தைப் பொறுத்து வழங்கப்படுகிறது. அதாவது 5 மணி நேரத்துக்கும் குறைவான வேலை நேரம் என்றால்... அவ்வேலை நேரத்தோடு கூடுதலாக ஒரு மணி நேரம் அளவுக்கு ஓய்வு வழங்கப்படுகிறது.

5 முதல் 8 மணி நேரம் வேலை என்றால், 6 மணி நேரம் ஓய்வு வழங்கப்படுகிறது.

8 மணி நேரம் அல்லது அதற்கு அதிகமான பணி நேரம் என்றால், 8 மணி நேரம் வெளியிட ஓய்வு வழங்கப்படுகிறது.

ரயில்வே சட்டம், 1989 இன் பிரிவு 133 மற்றும் HOER, 2005 விதி 12, இயங்கும் ஊழியர்களுக்கு அவ்வப்போது ஓய்வு வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை வகுக்கிறது.

இதன்படி, ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் குறைந்தது 5 முறை தொடர்ச்சியான 22 மணி நேரங்களுக்குக் குறையாத ஓய்வு அல்லது ஒரு முழு இரவு உட்பட தொடர்ச்சியான 30 மணிநேரங்களுக்குக் குறையாத 4 முறை ஓய்வு என்று வகுக்கப்பட்டுள்ளது.

லோகோ பைலட்டுகளின் இயக்க நேரம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. திடீர் மற்றும் அவசர தேவைகளுக்கான சந்தர்ப்பங்கள் தவிர, அவர்களது வேலை நேரம் இயல்பானதாகவே பராமரிக்கப்படுகிறது.

லோகோ பைலட்டுகளின் பணிச் சூழல் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களின் கேபினில் சிறந்த இருக்கை மற்றும் மேசைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது உற்பத்தி செய்யப்படுகிற புதிய லோகோக்களில் லோகோ பைலட்டுகளின் வசதிக்காக குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவர்களுக்காக மானிய விலையில் தரமான உணவு, கால் மசாஜ் கருவிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. உணவுக்கு இடைவேளை மற்றும் இயற்கை உபாதைகள் உள்ளிட்டவற்றுக்கான நேரம் அளிப்பது என்பது சரக்கு மற்றும் பயணிகள் லோகோ பைலட்டுகளுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரயில்வேயில் தற்போது 1.08 லட்சம் காலியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024 ஜனவரி முதல் டிசம்பர் வரை... உதவி லோகோ பைலட்டுகள், , தொழில்நுட்ப பணியாளர்கள், துணை ஆய்வாளர்கள், ரயில்வே பாதுகாப்புப் படையில் ஜூனியர் பொறியாளர்கள், டிப்போ மெட்டீரியல் சூப்பிரண்டுகள், வேதியியல் மற்றும் உலோகவியல் உதவியாளர். துணை மருத்துவப் பிரிவுகள், தொழில்நுட்பம் அல்லாத பிரிவுகளில் பட்டதாரிகள், பட்டதாரி அல்லாதவர்கள் உள்ளிட்ட பிரிவுகளில் 92, 116 காலியிடங்களுக்கான பத்து மையப்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

இவற்றில் 55 ஆயிரத்து 197 பணியிடங்களுக்கு முதல் நிலை கணினி அடிப்படையிலான தேர்வுகள் நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளன.

உதவி லோகோ பைலட்டுகளுக்கான 18. 799 காலி பணியிடங்களுக்காக 18 லட்சத்து 40 ஆயிரத்து 347 விண்ணப்பதாரர்களுக்கு 15 மொழிகளில் 156 நகரங்களில் முதல் கட்ட கணினி வழி தேர்வு நடத்தப்பட்டது. தொழில்நுட்ப பணியாளர்களுக்கான 14 ஆயிரத்து 298 காலி பணியிடங்களுக்காக, 26 லட்சத்து 99 ஆயிரத்து 892 விண்ணப்பதார்களுக்கு 239 நகரங்களில் 15 மொழிகளில் தேர்வு நடத்தப்பட்டது.

இவ்வாறு நாடு முழுதும் நடத்தப்பட்ட கணினி அடிப்படையிலான தேர்வுகளில் இரண்டாம் கட்ட தேர்வுகள் வரை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 14,298 தொழில்நுட்ப பணியாளர் காலியிடங்களில், 9,000 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர் களுக்கு ரயில்வே தேர்வு வாரியத்தால் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, 2025 ஆம் ஆண்டில் இரண்டு

மையப்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. -

9,970 உதவி லோகோ பைலட்டு பணி காலியிடங்களுக்கான மையப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு அறிவிப்பு மார்ச் 2025 இல் வெளியிடப்பட்டது.

6,238 தொழில்நுட்ப பணியாளர் காலியிடங்களுக்கான மையப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு அறிவிப்பு ஜூன் 2025 இல் வெளியிடப்பட்டது.

காலியிடங்கள் ஏற்படுவதும் நிரப்புவதும் இந்திய ரயில்வேயில் அதன் அளவு, இடஞ்சார்ந்த தேவை மற்றும் செயல்பாட்டின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும்.

வழக்கமான செயல்பாடுகள், தொழில்நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்கள், இயந்திரமயமாக்கல்கள் மற்றும் புதுமையான நடைமுறைகளுக்கு ஏற்ப போதுமான மற்றும் பொருத்தமான எண்ணிக்கையில் பணியாளர்கள் வேலை வாய்ப்புக்காக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

காலியிடங்கள், முதன்மை செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப தேவைகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் உதவியால் நிரப்பப்படுகின்றன.

ரயில்வே தேர்வு வாரியத்தின் தேர்வுகள் பெரிய அளவில் ஆட்களைத் திரட்டுதல் மற்றும் மனிதவளப் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியது.

ரயில்வே இந்த அனைத்து சவால்களையும் சமாளித்து, அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களையும் பின்பற்றி வெளிப்படையான முறையில் ஆட்சேர்ப்பை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட இந்தத் தேர்வுகளின் போது வினாத்தாள் கசிவோ, வேறு முறைகேடு எதுவும் ஏற்படவில்லை.

2004 முதல் 2014 வரையிலான பத்து ஆண்டுகளில் இந்திய ரயில்வேயில் 4 லட்சத்து 11 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. அதே வேளை 2014 முதல் 2024-25 வரையிலான 10 ஆண்டுகளில் 5 லட்சத்து 8 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் ரயில்வே நிர்வாகத்தில் புதிய முன்னேற்றமாக... ரயில்வே துறையின் குரூப் ‘சி’ பதவிகளின் ஆட்சேர்ப்புக்காக 2024 முதல் ‘வருடாந்திர வேலை வாய்ப்பு காலண்டர்’ வெளியிடும் முறையை ரயில்வே அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வேலை வாய்ப்புகள், நிச்சயமான தேர்வுகள், விரைவான ஆட்சேர்ப்பு செயல்முறை, பயிற்சி மற்றும் நியமனங்கள் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்துள்ளார்.

### சரக்கு மற்றும் சேவை வரிகளால் பாதிக்கப்பட்ட

## திருப்பூர் ஜவுளி ஆலைகளுக்கு, உற்பத்திக்கான ஊக்கத் தொகை வழங்கப்படுமா?

### மக்களவையில் — டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி, ஆக.2-*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் 29 சூலை 2025 அன்று மக்களவையில், திருப்பூரில் செயல்பட்டு வரும் சிறு, குறு ஜவுளி ஆலைகள், சரக்கு மற்றும் சேவை வரிகளால் பாதிக்கப்பட்டுள்ளது ஒன்றிய அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும், பங்களாதேஷ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஜவுளிப் பொருட்களை கட்டுபடுத்த ஏதேனும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும், உற்பத்திக்கான ஊக்கத் தொகையை பருத்தி ஆடைகளுக்குப் வழங்கும் திட்டம் ஏதும் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் ஜவுளித் துறை அமைச்சர், கிரிராஜ் சிங் அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.*



*ஒன்றிய அரசின் ஜவளித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-*

*பங்களாதேஷ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஜவுளி பொருட்கள், நவசேவா மற்றும் கொல்கத்தா துறைமுகங்களில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது என்றும், சணல் பொருட்கள் நவதேவா துறைமுகத்தில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது என்றும், சணல் பொருட்கள் செய்ய ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது என்றும், உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் வகையில், ஹெஸ்ஸியன் துணிகள், சணல் பொருட்கள் ஆகியவற்றிற்கான திணிப்பிற்கான எதிர் வரி விதிக்கப்படுகிறது என்றும், ஜவுளித் துறை அமைச்சர் தெரிவித்தார்.*

*மேலும், ஜவுளித்துறையில் செயல்பட்டுவரும் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், 15க்கும் மேற்பட்ட தடையில்லா வர்த்தக ஒப்பந்தங்களும், 6-க்கும் மேற்பட்ட முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், பாரா சூட் போன்ற தொழில்நுட்ப ஜவுளி ரகங்களுக்கு மட்டும் உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றும், பருத்தி ஆடைகளுக்கு வழங்கப்படுதில்லை என்றும் ஒன்றிய அமைச்சர், கிரிராஜ் சிங் பதிலை அளித்துள்ளார்.*

### திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்ற

## தமிழ்நாடு அரசின் கோரிக்கையை உடனே நிறைவேற்றுவீர்!

### மக்களவையில் — டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஆக. 2 -*

*வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் பாராளுமன்றத்தில் “திருக்குறளை தேசிய பொக்கிஷ நூலாக உடனடியாக அறிவிக்க வேண்டும்” என்று வலியுறுத்தினார்.*

*நாடாளுமன்றத்தில் விதி எண் 377-ன் கீழ் நடைபெற்ற விவாதத்தில் வேலூர் மக்களவை உறுப்பினர் டிஎம்.கதிர் ஆனந்த், தமிழரின் தொன்மைக்கு பெருமைமிகு அடையாளமாக விளங்கும் திருக்குறளை இந்தியாவின் “தேசிய பொக்கிஷ நூலாக” ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும் என்ற மிகமுக்கிய கோரிக்கையை வலியுறுத்தினார்.*



*“திருக்குறள் என்பது மத நூல் அல்ல. அது மனிதநேயம், நெறிமுறை, நீதி வழுவா நிலைத்தன்மை ஆகிய விழுமியங்களின் ஒருமித்த பிரதிபலிப்பு. இது தமிழருக்கான இனம் சார்ந்த சொத்தாக அல்ல, இந்தியாவின் ஒட்டுமொத்த அறநெறிச் சிந்தனையின் பெருமைமிகு குறள் வடிவம்” என்று குறிப்பிட்டார்.*

*தேசிய அளவிலான முக்கியத்துவம் மிக்க அரசியல் ஆளுமைகள் கூட திருக்குறளை அங்கீகரித்திருக்கிறார்கள். பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் இதே மக்களவையில் திருக்குறளை மேற்கோளாக காட்டியுள்ளனர். இது சர்வதேச, சமகால முக்கியத்துவம் மிக்க பண்பை நிரூபிக்கிறது”.*

*“மூன்று கடல்களின் சங்கமமான குமரி முனையில் திருவள்ளுவரின் 133 அடி உயர சிலையை நம் தமிழ் அரசியல் இலக்கிய உலகின் மாமன்னர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறுவினார். அவர் அதனை ஒரு சிலையாக அல்ல, தமிழர் அறிவை உலகிற்கு உரிமையாக்கும் அரசியல் அறிக்கையாக உருவாக்கினார்”.*

*“இன்று அந்த இலக்கியத்தொட்டிலில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், திருக்குறளை உலக அரங்கில் எடுத்துச் செல்லும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. தமிழை தழைக்கவைக்கும் அந்த முயற்சிகளுக்கு, தேசிய அளவில் அங்கீகாரம் உறுதி செய்தல் இன்றியமையாதது,”.*

*“திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பதைக் கோரி தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தது. நீதிமன்றங்கள் கூட திருக்குறளை இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து பாடத்திட்டங்களில் இணைக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளன. ஆனால் ஒன்றிய அரசு இன்னும் செவிமடுக்கவில்லை”.*

*“இன்றைய தலைமுறை நேர்மையை தேடுகிறது. பகை மறந்து வாழும் நேசத்தை, அதிகாரங்களைத் தாண்டிய வாழ்வியல் அறநெறியை, சமநீதியை திருக்குறள் கற்பிக்கிறது. எனவே, தேசிய பொக்கிஷ நூலாக திருக்குறளை அறிவிப்பது தமிழர்களுக்கான அங்கீகாரம் மட்டுமல்ல, இந்தியாவின் நேர்மையான எதிர்காலத்திற்கான முதலெழுத்தாகும்”.*

*இவ்வாறு அவர் பேசினார்.*

### அத்தியாவசிய உணவு — வீட்டுப் பொருட்களின்

## விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

### மாநிலங்களவையில் — இரா.கிரிராஜன் கேள்வி

*புதுடெல்லி, ஆக. 2 -*

*அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று நேற்று முன்தினம் மாநிலங்களவையில் கழக உறுப்பினர் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.*

*இது குறித்து விவரம் வருமாறு:-*

*நாடாளுமன்ற மழைகால கூட்டத் தொடரில் பேசிய கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன் அத்தியாவசிய உணவு மற்றும் வீட்டுப் பொருட்களின் விலைகள் ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருவது, ஒன்றிய அரசுக்கு தெரியுமா, விலைவாசி உயர்வால் ஏற்படும் நெருக்கடியையும், தாக்கத்தையும் குறைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உணவு தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளதா, நடுத்தர மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தணிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பினார்.*



*இதற்கு பதிலளித்துள்ள நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர் பி.எல். வர்மா, 566 விலை கண்காணிப்பு மையங்களால் சமர்ப்பிக்கப்படும் 38 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தினசரி விலைகளை கண்காணித்து வருவதாகவும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் நிலையானதா கவும், கட்டுப்பாட்டிலும் உள்ளதாக கூறியுள்ளார்.*

*அமைச்சகங்களுக்கு இடையேயான குழுவின் (IMC) விலை நிலவரத்தை தொடர்ந்து மதிப்பாய்வு செய்து, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும் இறக்குமதிகள் மூலமும் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதாகவும் ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.*

*விலை ஏற்ற இறக்கத்தை சமாளிக்கவும், சந்தை விலையை மிதப்படுத்தவும் பருப்பு வகைகள் மற்றும் வெங்காயத்தின் இருப்புகளை ஒன்றிய அரசு பராமரித்துவருவதாகவும், நுகர்வோருக்கு சில்லறை விற்பனை மலிவு விலையில் பருப்பு, ஆட்டா, அரிசி, வெங்காயம் ஆகியவற்றை மொபைல் வேன்கள் மூலம் சில்லறை நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும், வெங்காயம் ஒரு கிலோ 35 ரூபாய்க்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டதாகவும் உணவுத்துறை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.*

*இவை தவிர சர்க்கரை ஏற்றுமதியை கட்டுப்படுத்துவதாகவும், சமையல் எண்ணெய்களின் விலைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், நுகர்வோருக்கு மலிவு விலையில் வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருதாகவும் பதில் அளித்துள்ளார்.*

*இந்த நடவடிக்கைகளால் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மலிவு விலையில் கிடைப்பதற்கும், உணவுப் பணவீக்க விகிதத்தை ஆண்டுக்கு ஆண்டு (-) 1.06% ஆகக் குறைப்பதற்கும் உதவியுள்ளதாகவும் விளக்கம் அளித்துள்ளார்.*

*விலை உயர்வால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு என்ற அடிப்படையில் வரும் AAY குடுமத்துக்கு உணவு தானியங்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பிரதம மந்திரியின் ஏழைகளுக்கான உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் (PMGKAY) கீழ் சுமார் 81.35 கோடி பயனாளிகளுக்கு அவர்களின் உரிமையின் படி, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இலவச உணவு தானியங்களை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும், தி.மு.க. எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு ஒன்றிய உணவுத் துறை அமைச்சர் பதில் அளித்தார்.*